கடிதம் (1டி) எண்.144 நாள் 10.03.2008

அனுப்புநர்
திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

அம்மையீர்,

பொருள் : சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – தருமபுரி மாவட்டம் – அரூரில் புதியதாக அரசினர் கலைக் கல்லூரி நிறுவுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.1 கோடி அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி(ம)ஊராட்சித்துறை நாள் 17.5.07.
2. திரு.பி.டில்லிபாபு, அரூர் சட்டமன்ற உறுப்பினர் கடிதம் 16.8. 07 (ம) 22.8.07
3. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் நே.மு. க.ந.க.223/08–த1, நாள் 6.2.2008.

----

பார்வை 2ல் உள்ள கடிதத்தில் அரூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், தருமபுரி மாவட்டத்தில் ஒரே ஒரு அரசு கலைக் கல்லூரி மட்டுமே உள்ளதால், அம்மாவட்டத்தை சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி பயிலுவதற்காக அரூரில் புதிதாக அரசு கலைக் கல்லூரி துவங்குவது அவசியம் என்றும், அதற்காக ரூ.1.00 கோடியை, 2008–2009ஆம் ஆண்டின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்குமாறு அரசினை கேட்டுள்ளார்.

2) அரூரில் அரசு கலைக்கல்லூரி அமைக்கத் தேவையான 5 ஏக்கர் நிலம் உடனடியாக கிடைக்குமா என்பது குறித்து தருமபுரி மாவட்ட ஆட்சியரின் கருத்து அறியப்பட்டது. அதற்கு பார்வை 3ல் உள்ள தனது நேர்முக கடிதத்தில் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர், அரூர் வட்டம், ஜங்கிலிவாடி கிராமம், புல எண்.48/8, விஸ்தீர்ணம் 1.58.0 ஹெக்டேர் நிலம் தீர்வு ஏற்படாத தரிசு (விளையாட்டு மைதானம்) என கிராம கணக்குகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இந்த புலம் விளையாட்டு மைதானம் என குறிப்பிடப்பட்டிருந்தாலும், விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்படவில்லை என்றும், மேற்படி கல்லூரி அமைக்க 5 ஏக்கர் நிலம் கோரியுள்ள சூழ்நிலையில் தற்போது நிலமாறுதல் செய்ய 3.91 ஏக்கர் மட்டுமே தகுதியான புறம்போக்கு நிலம் உள்ளது என்றும், மேலும் கூடுதல் தேவைக்கு பிரஸ்தாப புலத்திற்கு அருகில் உள்ள புல எண்.49ல் உள்ள 2 ஏக்கர் பட்டா நிலத்தினை சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களிடமிருந்து ஊராட்சிமன்றத் தலைவர், ஊராட்சியினர் சார்பாக பெற்று தருவதாக உறுதியளிப்பதாகவும், பட்டா நிலங்களைப்பெற

தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், பிரஸ்தாப புலம் அரூர் தேர்வு நிலை பேரூராட்சியிலிருந்து அரூர் – தீர்த்தமலை சாலைக்கு 1கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதால், மேற்படி புலத்தினை அரசு கலைக் கல்லூரி அமைக்க பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

3) தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துருவினை சிறப்பு நிகழ்வாக ஏற்றுக்கொண்டு, அரூரில் புதியதாக அரசு கலைக் கல்லூரி நிறுவுவதற்காக அரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட 2008–2009ஆம் ஆண்டிற்குரிய நிதியிலிருந்து ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) தொகையை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட 2007–2008ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தளர்த்தி சிறப்பு நிகழ்வாக தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

சிறப்பு ஆணையர் மற்றும்
அரசு செயலாளருக்காக.